செ.வெ.எண்: 03/நவம்பர் நாள்: 04.11.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்குவது தொடர்பாக விவசாய சங்க பிரதிநிதிகளுடன் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் நடைபெற்றது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் 2018-19ம் ஆண்டில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளில் 283 கிராமங்களில் 82106 விவசாயிகளுக்கு ரூ.304.63 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டது. மீதம் உள்ள கிராமங்களுக்கு மற்றும் 5 ஏக்கருக்கு மேல் உள்ள 6901 விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்கப்படாத நிலையில் திருவாடானை மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் ஆகிய வட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் 05.11.2020 அன்று திருவாடானையில் காத்திருப்பு போராட்டம் நடத்த உள்ளதாக தெரிவித்த நிலையில் இன்று (04.11.2020) திருவாடானை தாலுகா அலுவலகத்தில் மாவட்ட வேளாண்துறை அலுவலர்கள், இரு வட்ட தாசில்தார்கள், காவல்துறையினர் மற்றும் விவசாய பிரதிநிதிகள் சுமார் 50 நபர்கள் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 6901 விவசாயிகளுக்கான இழப்பீட்டு தொகை ரூ.61 கோடி இன்று வழங்க உத்தரவு பெறப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகிறது எனவும், இழப்பீடு வழங்கப்படாத கிராமங்களுக்கு இன்னும் 30 நாட்களுக்குள் இழப்பீட்டு தொகை வழங்கிட இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது என்ற விபரம் அதிகாரிகளால் விவசாயிகளிடத்தில் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் இரண்டு வட்ட விவசாய பிரதிநிதிகள் போராட்டத்தை கைவிடுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**